செய்தி வெளியீடு எண் : 1397 நாள் : 12.08.2022

செய்தி வெளியீடு

# உலக யானைகள் தினம் , சென்னை மெரினா கடற்கரையில் உண்ணி களைச்செடிகளால் தயாரிக்கப்பட்ட யானைகள் நிறுவி விழிப்புணர்வினை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

சென்னை மெரினா கடற்கரையில் இன்று (12.08.2022) மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் உலக யானைகள் தினத்தையொட்டி உண்ணி களைச்செடிகளால் தயாரிக்கப்பட்ட யானைகளை நிறுவி விழிப்புணர்வினை தொடங்கி வைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 ஆம் தேதி உலக யானைகள் தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் உள்ள யானைகளின் வாழ்விடங்களில் தமிழ்நாட்டின் வனப்பகுதிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பண்டைய தமிழ் இலக்கியத்தில் உள்ள யானைகள் பற்றிய குறிப்புகள் தமிழர் வாழ்வியலில் யானைகள் ஒரு அங்கமாக விளங்குகின்றன. யானைகள் பாதுகாப்பினை உறுதி செய்ய யானைகளின் வாழ்விட பாதுகாப்பிற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் 4 யானைகள் காப்பகங்கள் உள்ளன. 1. நீலகிரி யானைகள் காப்பகம், 2. நிலம்பூர் யானைகள் காப்பகம், 3. ஸ்ரீவில்லிபுத்தூர் யானைகள் காப்பகம், 4. ஆனைமலை யானைகள் காப்பகம். 2017ஆம் ஆண்டு நடந்த யானைகள் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் சுமார் 2,700 யானைகள் உள்ளன. உலக யானைகள் நாளில், தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகத்தியமலை அறிவிக்கப்பட்டிருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. கானுயிர்ச் சூழலமைப்புகளின் சமநிலையைப் பேணுவதில் யானைகள் மிக முக்கியப் பங்கினை ஆற்றுகின்றன. இயற்கையின் கொடையான இந்த மிடுக்குமிகு பாலூட்டிகளை எவ்விலை கொடுத்தேனும் நாம் பாதுகாக்க வேண்டும் என்று மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, இ.ஆ.ப., வனத்துறை முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (துறைத் தலைவர்) திரு.சையத் முஜம்மில் அப்பாஸ், இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்/தலைமை செயல் அலுவலர் (கேம்பா) திரு.சுப்ரத் மஹாபத்ர, இ.வ.ப., வனத்துறை கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்கள், மற்றும் வனத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in